SEP 16 to OCT 15, 2023

# THE JEWEL

*Bulletin of*

# LIONS CLUB OF SIVAKASI

Vol : 4



**Editor** : Lion Deepa Lakshmi Sudhakaran
**Address** : 641, Gnanagiri Road, Sivakasi.
**Phone** : 94875 91369
**Email** : editor.lionsclubofsivakasi@gmail.com



**Lion K.Prabakar**
*President*
98949 95884
president@lionsclubofsivakasi.com



**Lion P.Nithyapandi**
*Secretary*
94431 69876
secretary@lionsclubofsivakasi.com



**Lion P.Sudhakaran**
*Treasurer*
94433 31369
treasurer@lionsclubofsivakasi.com

**Associate Editors 2023 - 24**



**Lion MJF P.Vinoth Kanna**



**Lion M.Raddhikadevi**



**Lion S.Bhavani**



**Lion Amirtha Priya**

## Slogan : Deserve, Fight for Right
## Theme : Touch the Heart by Service

# Lions Club of Sivakasi Surpassing
# 62nd Year 1961 - 2023

| | | |
|---|---|---|
| Multiple District | : | 324 |
| District | : | 324 A |
| Region | : | Raja Rajan |
| Zone | : | Vilvam |
| Club No | : | 26504 |
| Inaugurated on | : | 09-05-1961 |
| Charterd on | : | 19-05-1961 |
| Total Members | : | 223 |
| Charter Member | : | 1 |
| MJFs & PMJFs | : | 28 & 3 |
| Meeting Days | : | I, II, IV Wednesday |
| Meeting Venue | : | Sivakasi Lions Junior School Palaniandavarpuram Colony, Sivakasi. |
| Permanent Project | : | The Sivakasi Lions Mat.School, Sivakasi. Bus Shelters, Children's Park, Blood Separation Unit, Blood Storage D.Freezer, ICU Ward & Washing Plant at Sivakasi G.H., Library and sewing machine centre in Burma Colony. |

Table of

# CONTENT

| Page No. | |
|---|---|
| 4 | President Report |
| 5 | Secretary Report |
| 11 | Treasurer Report |
| 12 | Editor Report |
| 15 | Dr.Patti Hill's Message |
| 16 | Global Service of Pride |
| 19 | 324-A மாவட்டச் செய்திகள் |
| 21 | 324 கூட்டு மாவட்ட விருது |
| 24 | Lion Star |
| 27 | Cover Story - Senior Campus |
| 32 | General Body Meeting - Sep. |
| 35 | பட்டிமன்றம் |
| 39 | உலக லயன்ஸ் சேவை தினம் |
| 43 | Eye Health and Safety |
| 45 | Lions Cubs achievements |
| 48 | Unveiling School Activities |
| 50 | காந்தி ஜெயந்தி |
| 52 | Enjoyable Content |
| 54 | Cherishing the moments of our members |
| 56 | வாழ்த்துரை |

# தலைவர் உரை



அனைவருக்கும் வணக்கங்கள். நமது சங்க இணைய தளம் முடியும் தருவாயில் உள்ளது. நவம்பர் மாத முதலாவது பொதுக் குழு கூட்டத்தில் இணையதளத்தை துவங்க முடிவு செய்துள்ளோம் இரண்டாவது பொதுக் குழுக் கூட்டத்திற்கு நமது இரண்டாவது துணை ஆளுநர் Lion H.ஷாஜஹான் PMJF அவர்கள் வருகை தர உள்ளார்கள். மேலும் 2024 ஜனவரி மாதம் தைப் பொங்கல் முடித்த பிறகு Inter State Inter Club Meeting நடத்த திட்டமிட்டுள்ளோம். அதற்கான அறிவிப்பினை வெகு விரைவில் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம். சர்விஸ் பிராஜெட்களுக்கு ஸ்பான்ஸர் செய்துள்ள அரிமாக்கள் அனைவருக்கும் நன்றிகள் தெரிவித்துக் கொள்கிறோம். வரப்போகும் சர்விஸ் பிராஜெட்டுகள் அனைத்திற்கும் தாங்கள் அனைவரும் ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

**Lion K.Prabakar**
*President*

***"Lions Club of Sivakasi" is our club's facebook ID by following this page you can stay Connected with all the latest updates, activities and inspiring stories of our club.***

# செயலாளர் அறிக்கை

*Lion P.Nithyapandi*



சேவை உள்ளம் கொண்ட அரிமாக்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்

செப்டம்பர் 16 முதல் அக்டோபர் 15 வரை நமது சங்கத்தின் செயல்பாடு மற்றும் சேவைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

23.09.23 அன்று zone advisory meeting, Zone inter Club meeting, லயன்ஸ் காஸ்மாஸ் சங்கம் நடத்தியது. அதில் நமது சங்கத்தின் சார்பாக முத்தலைவர்களும் கலந்து கொண்டோம்.

27.09.23 அன்று செப்டம்பர் மாத இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம் Zone Chairperson official vist-ஆக நடைபெற்றது. கௌரவ விருந்தினராக DC for Bulletin வருகை புரிந்து சிறப்பித்தார். நமது சங்கத்தின் மூன்றாவது சங்க இதழ் வெளியிடப்பட்டது.

4.10.2023 அன்று நமது சங்கத்தின் நான்காவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

6.10.23 அன்று நமது லயன்ஸ் பள்ளியில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி நிகழ்ச்சியில் முத்தலைவர்கள் மற்றும் துணை செயலாளர் கலந்து கொண்டோம். விழாவில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினோம்.

11.10.23 அன்று பொதுக்குழு கூட்டம் ஆரம்பிக்கும் முன்பு குடும்பப் பிரச்சனைகளை சமாளிப்பதில் வல்லவர் கணவரா? அல்லது மனைவியா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. Dr.K.வளர்மதி அவர்கள் தலைமையேற்று நடத்தினார். இதில் நமது சங்க உறுப்பினர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

| தேதி | சேவை பெறுபவர்கள் | பொருள் |
|---|---|---|
| 16.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 18.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 19.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 19.09.23 | எரிச்சநத்தத்தில்<br>உள்ள 500 நபர்கள் | மருத்துவ முகாம் |
| 20.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 21.09.23 | ஜீவக்கல் முதியோர்<br>இல்லம் | முட்டை |
| 19.09.23 | ஜீவக்கல் முதியோர் இல்லம்<br>முதியவர்கள் 80 நபர்கள் | மதிய உணவு |
| 21.09.23 | ஜீவக்கல் முதியோர் இல்லம்<br>முதியவர்கள் 80 நபர்கள் | மதிய உணவு |
| 19.09.23 | எரிச்சநத்தத்தில்<br>உள்ள 500 நபர்கள் | நீரிழிவு விழிப்புணர்வு<br>சிறப்பு மருத்துவ முகாம் |
| 22.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 23.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 25.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 26.09.23 | தினை மூடை<br>100 கிலோ | சிட்டுக்குருவிகளுக்கு<br>உணவு |
| 26.09.23 | அமிர்தா அன்பு இல்லம் | மதிய உணவு |
| 26.09.23 | அமிர்தா அன்பு இல்லம் | அரிசி, பலசரக்கு சாமான்<br>(ஒரு மாதத்திற்கு தேவையான) |

| தேதி | சேவை பெறுபவர்கள் | பொருள் |
|---|---|---|
| 26.09.23 | கொங்கலாபுரம்,<br>அரசு பள்ளி | Smart TV |
| 26.09.23 | சிவகாசி<br>அரசு பொது மருத்துவமனை | 6 ஏசி இயந்திரங்கள்<br>2 டன் |
| 26.09.23 | சிவகாசி<br>அரசு பொது மருத்துவமனை | ஆப்ரேஷன் தியேட்டர்,<br>ரத்த வங்கி மற்றும் தீக்காய<br>பிரிவுக்கும் பாலிடீசன் பிளேயர்<br>மேட் ஃபால்ஸ் சீலிங்<br>செய்யப்பட்டது |
| 27.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 27.09.23 | கணேசன்<br>சிவமுருகன்<br>விஜயகுமார்<br>பாண்டீஸ்வரி<br>மாடத்தி | செயற்கை கால் |
| 27.09.23 | ஜெயந்தி | தையல் மிஷின் |
| 27.09.23 | முத்துலட்சுமி | கல்வி உதவித்தொகை |
| 27.09.23 | சிவகாசி<br>அரசு பொது மருத்துவமனை | சக்கர நாற்காலி |
| 28.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 29.09.23 | ஜீவக்கல் முதியோர்<br>இல்லம் | முட்டை |
| 29.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 30.09.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 02.10.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |

| தேதி | சேவை பெறுபவர்கள் | பொருள் |
|---|---|---|
| 02.10.23 | | மரக்கன்றுகள் நடப்பட்டது |
| 03.10.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 04.10.23 | ஜீவக்கல் முதியோர் இல்லம் | முட்டை |
| 04.10.23<br>05.10.23<br>06.10.23<br>07.10.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 07.10.23 | சிபியோ பள்ளி | பலசரக்கு சாமான்கள் |
| 08.10.23 | ஜீவக்கல் முதியோர் இல்லம்<br>ஜீவக்கல் முதியோர் இல்லம்<br>அன்னை இல்லம்<br>அன்னை இல்லம்<br>அன்னை இல்லம்<br>வள்ளலார் இல்லம் | முட்டை, பலசரக்கு சாமான்கள்<br>மதிய உணவு<br>இன்வெர்டர் பேட்டரி<br>மரக்கன்று<br>மதிய உணவு<br>பலசரக்கு சாமான்கள்,<br>மதிய உணவு |
| 09.10.23 | S.H.N.V.ஆண்கள் மேல் நிலைப்பள்ளி<br>பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள்<br>Garbage Vehicle | மருத்துவ முகாம்<br><br>மதிய உணவு<br>Sivakasi Corporation |
| 10.10.23 – 15.10.23 | பசிக்கு உணவு திட்டம்<br>முதியவர்கள் 10 நபர்கள் | மதிய உணவு |
| 12.10.23 | 6 Traffic Barricades | Sivakasi Lions School |
| 13.10.23 | பேராபட்டி அரசு மேல் நிலைப்பள்ளி | மருத்துவ முகாம் |

| People Served | Service Activities Completed | Volunteer Hours | Funds Donated (USD) | Funds Raised (USD) |
|---|---|---|---|---|
| 48.4K | 228 | 15.4K | $106.4K | $106.2K |

# LIONS INTERNATIONAL

DIST - 324 A 2023 - 24

## REGION - RAJA RAJAN

### QUARTERLY SERVICE ACTIVITIES REPORT

TOTAL SERVICE ACTIVITIES : 616 TOTAL BENEFICIARIES : 76920

**ZONE : COCONUT TREE / ZONE CHAIRPERSON - Ln. P.K. SUBBIAH**

| CLUB NAME | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|
| LIONS CLUB OF WATRAP | 2 | 65 |
| LIONS CLUB OF RAJAPALAYAM | 3 | 100 |
| LIONS CLUB OF RAJAPALAYAM TOWN | 45 | 1700 |
| LIONS CLUB OF MEENAKSHIPURAM CENTENNIAL | | |
| LIONS CLUB OF MALLI PEARLS | 7 | 283 |
| LIONS CLUB OF VIRUDHUNAGAR PERFECT KINGS | | |

**ZONE : JACKFRUIT TREE / ZONE CHAIRPERSON - Ln. G. RAMALINGAM**

| CLUB NAME | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|
| LIONS CLUB OF SIVAKASI INDUSTRIAL TOWN | 245 | 13900 |
| LIONS CLUB OF SIVAKASI METRO | 10 | 263 |
| LIONS CLUB OF VIRUDHUNAGAR BUSI TOWN | 18 | 86 |
| LIONS CLUB OF SIVAKASI JOYSTAR | 2 | 55 |
| LIONS CLUB OF VEMBAKOTTAI PASSION | | |

**ZONE : KHEJRI TREE / ZONE CHAIRPERSON - Ln. I. KUMARAVEL RAJAN**

| | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|
| LIONS CLUB OF VIRUDHUNAGAR | 4 | 455 |
| LIONS CLUB OF SRIVILLIPUTTUR | 33 | 14300 |
| LIONS CLUB OF THIRUTHANGAL | 1 | 42 |
| LIONS CLUB OF SIVAKASI CENTRAL | 7 | 238 |

**ZONE : VILVAM TREE / ZONE CHAIRPERSON - Ln. M. STEPHEN MJF**

| | TOTAL SERVICE ACTIVITIES | TOTAL BENEFICIARIES |
|---|---|---|
| LIONS CLUB OF SIVAKASI PEARLS SPARK | 10 | 153 |
| **LIONS CLUB OF SIVAKASI** | **204** | **44900** |
| LIONS CLUB OF SIVAKASI COSMOS | 24 | 360 |
| LIONS CLUB OF KOVILPATTI DYNAMIC | 1 | 20 |
| LIONS CLUB OF SIVAKASI PERFECT KINGS | | |

* Service Activities Details taken into account shown in my lion.

# LIONS INTERNATIONAL

DIST - 324 A 2023 - 24

## REGION - RAJA RAJAN

**QUARTERLY MEMBERSHIP REPORT**

| | | | |
|---|---|---|---|
| Clubs as on 1st July 2023 | : 17 | Members as on 1st July 2023 | : 1012 |
| Transfered Clubs | : 01 | Newly AddedMembers | : 88 |
| New Clubs | : 02 | Dropped Members | : 29 |
| Total Clubs | : 20 | Total Members | : 1071 |
| | | Net Gain | 59 |

### ZONE : COCONUT TREE / ZONE CHAIRPERSON - Ln. P.K. SUBBIAH

| CLUB NAME | Members as on JULY 1 | Newly Added | Dropped | Total Members on 30 th Sep |
|---|---|---|---|---|
| LIONS CLUB OF WATRAP | 45 | 0 | 0 | 45 |
| LIONS CLUB OF RAJAPALAYAM | 138 | 0 | 3 | 135 |
| LIONS CLUB OF RAJAPALAYAM TOWN | 60 | 0 | 16 | 44 |
| LIONS CLUB OF MEENAKSHIPURAM CENTENNIAL | 30 | 0 | 0 | 30 |
| LIONS CLUB OF MALLI PEARLS | 32 | 7 | 0 | 39 |
| LIONS CLUB OF VIRUDHUNAGAR PERFECT KINGS | 0 | 26 | 0 | 26 |

### ZONE : JACKFRUIT TREE / ZONE CHAIRPERSON - Ln. G. RAMALINGAM

| CLUB NAME | Members as on JULY 1 | Newly Added | Dropped | Total Members on 30 th Sep |
|---|---|---|---|---|
| LIONS CLUB OF SIVAKASI INDUSTRIAL TOWN | 112 | 1 | 1 | 112 |
| LIONS CLUB OF SIVAKASI METRO | 19 | 0 | 0 | 19 |
| LIONS CLUB OF VIRUDHUNAGAR BUSI TOWN | 15 | 1 | 0 | 16 |
| LIONS CLUB OF SIVAKASI JOYSTAR | 21 | 1 | 3 | 19 |
| LIONS CLUB OF VEMBAKOTTAI PASSION | 23 | 0 | 0 | 23 |

### ZONE : KHEJRI TREE / ZONE CHAIRPERSON - Ln. I. KUMARAVEL RAJAN

| | Members as on JULY 1 | Newly Added | Dropped | Total Members on 30 th Sep |
|---|---|---|---|---|
| LIONS CLUB OF VIRUDHUNAGAR | 89 | 1 | 3 | 87 |
| LIONS CLUB OF SRIVILLIPUTTUR | 36 | 0 | 0 | 36 |
| LIONS CLUB OF THIRUTHANGAL | 32 | 0 | 0 | 32 |
| LIONS CLUB OF SIVAKASI CENTRAL | 26 | 0 | 0 | 26 |

### ZONE : VILVAM TREE / ZONE CHAIRPERSON - Ln. M. STEPHEN Mjf

| | Members as on JULY 1 | Newly Added | Dropped | Total Members on 30 th Sep |
|---|---|---|---|---|
| LIONS CLUB OF SIVAKASI PEARLS SPARK | 22 | 2 | 2 | 22 |
| **LIONS CLUB OF SIVAKASI** | **220** | **3** | **0** | **223** |
| LIONS CLUB OF SIVAKASI COSMOS | 67 | 0 | 0 | 67 |
| LIONS CLUB OF KOVILPATTI DYNAMIC | 25 | 0 | 1 | 24 |
| LIONS CLUB OF SIVAKASI PERFECT KINGS | 0 | 46 | 0 | 46 |

## TREASURER REPORT

*Lion P.Sudhakaran*



Dear Members,

I would like to extend my heartfelt gratitude to each and every one of you, for your generous subscription contributions. Your support is the life blood of our club. Your Subscription not only helps us to Sustain our club's activities, but also fuels our shared vision and Goals.

I Kindly request those members who haven't paid their subscription amount to do so at your earliest Convenience.

## World Smile day

உலக புன்னகை தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையில் கொண்டாடப்படுகிறது. ஒரு உண்மையான புன்னகை நமது உற்சாகத்தை உயர்த்துவது மட்டும் இல்லாமல் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் நாளை பிரகாசமாக்குகிறது.

புன்னகை - இது ஒரு வார்த்தையில்லா மந்திரம், உங்கள் புன்னகை தேவைப்படுபவர்களுக்கு ஒரு சேவையாகும், மேலும் அது அவர்களின் உலகில் ஒளியின் கதிரைக் கொண்டு வர முடியும்.

**கொடுப்பது என்பது பணம் மட்டுமல்ல**

**நல்ல மனம் கொண்ட சிறு புன்னகையும் தான்**

**புன்னகையால் நம்பிக்கை கொடுங்கள்**

**மகிழ்ச்சியும் மனநிறைவும் பொங்கட்டும்.**

# Editor report

***Lion Deepa Lakshmi Sudhakaran***



Dear lions,

Warm greetings and good wishes to you all,we are delighted to present the 4th issue of our bulletin, featuring highlights from our Club's activities.

We have the honour of celebrating the remarkable achievements of PMJF Lion D Prabhakaran and MJF P.Vinoth kanna who have earned the prestigious Multiple District Awards.

We Congratulate the Service of our Secretary Family in Feeding our Feathered Friends which Flyed high in all social media, and also we are proud to share the outstanding achievement of our Cub Rithika, daughter of Lion R.C P.Raju and Lion Thilaga who has emerged as a young entrepreneur.

In an effort to celebrate the achievement of our extended club family, we are inviting all members to share about their cubs accomplishments to the editorial team.

It may be Community service, artistic talent, or any other noteworthy achievements, we like to showcase and recognise their success in our magazine. Your voices matters and they enriches the content of our bulletin.

**The best way not to feel hopeless is to get up and do wait for good things to happen to you.If you go out and make some good things happen, you will fill yourself with hope.**

# Safety Sparkle and Service Shine in Diwali

**DIWALI -** The festival of lights is nearing. It is the biggest and grandest festival celebrated in India. Preparations are in full swing! Houses, shops, offices are being cleaned, for the festivities. People are busy in shopping clothes, gifts and valuables. The air is filled with excitement and festive fragrance.

Diwali symbolizes the victory of light over darkness, good over evil and knowledge over ignorance. This Diwali, let's celebrate this symbolism. Let's be the torchbearer to dispel the darkness of illiteracy, poverty, hunger, unemployment, pollution that threatens our society, here are some unique ways in celebrating Diwali.

**Shop Locally :** Your Diwali shopping is a source of livelihood for many People. Buy things from local market, and the street side vendors because they do not sell for profits rather to make their ends meet. You will find unique and handmade items that add a personal touch to your celebration.

**Online Shopping :** If you prefer online shopping, buy some products from local e-commerce platforms that feature products from small businessmen your region.

**Share on Social Media :** Promote local vendors by sharing their products and services on social media platforms.

**Leave a Positive review :** After making Purchases leave a positive review, which will motivate them and also refer

others to buy at local vendors which will attract more customers.

**Donate :** Diwali is a time for us to Cook up a feast, refresh our wardrobe, upgrade home appliances, buy festive wears. But for many people Diwali celebration is a distant dream. You can donate meal and unused festive wears which just sits in the Corner of your wardrobe.

Your no longer used festive wear is a luxury wear for someone else.

---

## ஒன்றாக இணைந்து டெங்குவை வெல்வோம்

"Small Bite - Big Threat" மழைக்காலம் துவங்கும் வேளையில் டெங்குவின் பாதிப்பும் அதிகரிக்க துவங்கும். அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் ஆனால் அபாயத்தை குறைக்க நாம் நடவடிக்கை எடுக்கலாம். டெங்கு நெறிமுறையை நாம் பின்பற்றி நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். நம் சமூகத்தைப் பாதுகாக்க நாம் விரைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

**SPREAD AWARNESS, NOT DENGUE"**



# International President Message




Dear Lion,

When you give someone a drink of water, you can quench their thirst for a day. But by building a clean water system, you change their lives-and their community for good. That is the kind of big, sustainable impact that our greatest partner, Lions Clubs International Foundation (LCIF), helps us make every single day. Our foundation gives us the support we need to expand our service and support our growing membership. But just like every great partnership, that support works both ways. We support LCIF and LCIF supports us. So, let's keep serving, and let's keep supporting great service at home and around the world with LCIF.

Yours in service,

Dr. Patti Hill

International President

# *Global Service of Pride*

In this article, we'll delve into the specific projects and initiatives undertaken by the Lions Club, at both the National and International levels, highlighting the incredible difference they make in the lives of people around the globe.

**LCIF Melvin Jones photo contest :** In honor of Melvin Jones 145th birthday, be a part of the Lions Club International Foundations, Melvin Jones photo contest and show your Pride!. Snap a picture of what it means To Be a LION or LEO. Winners one from each constitutional area, will receive one complementary individual registration and luncheon ticket to the 106th Lions Club International Convention in Melbourne.




The contest is open between October 1, 2023 to December 31, 2023. The deadline for voting and submission is December 31, 2023 at midnight Central time zone. Winners will be announced in January 15, 2024. To enter and vote visit https://lcif pride.org/photo_contest.




**Childhood Cancer Awareness :**

September is Childhood Cancer Awarness month, and is symbolized by a gold ribbon. Sadly more than 4,00,000

children are diagnosed with Cancer each year. 9 in 10 diagnosed children live in low and middle income Countries (LMICA) < 30% of children with Cancer in LMICs survive, Compared to ≥ 80% in high income Countries.

Lions and Leos, with the support of Lions Clubs International Foundation (LCIF), provide support for the needs of Children and families affected by Childhood Cancer through impactful service activities. From July 2002 to June 2023, LCIF has awarded 23 Childhood Cancer-related grants totaling US $1,398,870.

LCIF and Global HOPE (Hematology - Oncology Pediatric Excellence), a program of Texas Children's Hospital and Baylor College of Medicine, announce a new partnership to improve childhood Cancer Survival rates.

Aruna Abhey Oswal Trust, joining with LCIF, a modern health and wellness playground as well as a care diagnostic equipment have been provided to treat and enhance the lives of children affected by cancer.

**LIONS House : Hungary**

The Pecs - Normandia Lions club was founded in 1992. LIONS House a free accommodation for those parents, whose children are battling with leukemia or tumors. The LION House has been providing support Since 1994 with 2 beds and after Continuous expansions they



have now an accomodation with 10 rooms and 28 beds and able to host the sick children's parents from every department of the children's Clinic of Pecs.



International Past President Brain E.Sheehan and his wife Lori Harr Sheehan Visited the LIONS House.

**Omkar and Lions School for the Deaf :**

Chartered in 1958, Visakhapatnam Lions Club of District 316 A has been making a positive impact on thousands of lives through its many permanent projects, from gifting life through the Lions Blood Bank, Lions Medical Centre, the Lions Jeevandhara Pharmacy, The Lions Body Balancing Therapy, The Lions Yoga and Pranayama Centre and The Lions Taekwondo Training Centre. The Lions Women Vocational Training Centre, The Omkar and Lion's school for Deaf, Lions Sanitary Napkin Manufacturing Unit and the Lions wall of kindness.

Omkar and Lion's school for Deaf started in 1976 is one of the oldest School for hearing impaired students in Visakhapatnam. It was started by Sharti Ashram in Collaboration with Lions club. When the School started there were just two teachers and five students, now there are more than 180 students.



# 324-A மாவட்டச் செய்திகள்

நமது ஆளுநர் தலைமையில் புதியதாக நமது மாவட்டத்தில் மூன்று சங்கங்கள் உதயமாகியது.

Lions club of Rajapalayam Perfect Kings
Sep. 17th 2023



Lions club of Thingal Nagar Central
Sep.18th 2023



Lions Club of Sivakasi Perfect
Sep. 24th 2023



**GAT Conclave :** 324 A மாவட்டத்தின் 2023-24 GAT Canclave பயிலரங்கம் கொடைக்கானல் அஞ்சப்பர் பாப்பிஸ் ஹாலில் வைத்து நமது PERFECT மாவட்ட ஆளுநர் MJF Lion Dr.D.பிரான்ஸிஸ் ரவி அவர்களின் தலைமையில் செப்டம்பர் 29, 30 மற்றும் அக்டோபர் 1 ஆகிய மூன்று தினங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.





Touch the Heart by Service

முத்தலைவர்களின் ஆளுமைக்கு வலுசேர்க்கும் விதமாக பயிலரங்கம் தலைமைப் பண்பை மேலும் சிறப்பாக்கும் விதத்திலும், மேடைப் பேச்சாற்றலில் சிறப்பு பெறவும் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்கவும், தக்க வைக்கவும் பன்னாட்டு இயக்குனர் PMJF லயன் R.மதனகோபால் மற்றும் முன்னாள் பன்னாட்டு இயக்குனர்கள் மற்றும் முன்னாள் ஆளுநர்கள் சிறப்பாக பயிற்சி கொடுத்தார்கள்.

சேவைக்குத் தேவை பணமா, நல்ல மனமா எனும் சிந்தனையை தூண்டும் பட்டிமன்றம் சிறப்பாக நடைபெற்றது.

**RLLI பயிற்சி :**




324 பன்னாட்டு மாவட்ட RLLI பயிற்சி பட்டறை, அக்டோபர் 10, 11, 12 தேதிகளில் ஏலகிரியில் வைத்து நடைபெற்றது. 324A மாவட்டம் சார்பாக பலர் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றார்கள்.

**324A அமைச்சரவை இரண்டாம் காலாண்டு கூட்டம் :** 324A அமைச்சரவை இரண்டாம் காலாண்டு கூட்டம் 15.10.23 அன்று காலை 9.30 மணியளவில் கன்னியாகுமரியில் உள்ள J.P.மஹாலில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் 28.10.23 ஆம் தியதி நமது 324-A மாவட்டத்தில் அமைய இருக்கும் நமது லயன்ஸ் மண்டபத்தின் அடிக்கல் நாட்டும் விழா நடைபெறும் என்று மாவட்ட ஆளுநர் MJF Lion Dr.D.பிரான்சிஸ் ரவி அவர்கள் அறிவித்தார்.



## கூட்டு மாவட்டம் 324 விருது வழங்கும் விழா

1956 ஆம் ஆண்டில், லயன்ஸ் இயக்கம் இந்தியாவில் டெல்லி மற்றும் மும்பையில் விதைகளை விதைத்த போது, இந்தியா மாவட்டம் 304யில் வைக்கப்பட்டது. இதில் இந்தியா, இலங்கை மற்றும் பர்மா ஆகிய நாடுகளை உள்ளடக்கியது.

பின்பு படிப்படியாக சீரமைக்கப்பட்டு 2021 -22யில் 304 A, B, C, D, E, F, G, H, I, J, K, L, M என 13 மாவட்டங்கள் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நமது சங்கம் 324A மாவட்டத்தில் உள்ளது. இந்த 13 மாவட்டங்களில் உள்ள சங்கங்களின் தலைசிறந்த செயல்பாட்டையும், சேவைகளையும் பாராட்டி சிறந்த தலைவர்களுக்கு விருது வழங்கும் விழா 23.09.23 அன்று சென்னையில் உள்ள் J.P.Hotel-லில் மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது.

Lion K.R.முத்தையா (Multiple Council Chairperson) தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பன்னாட்டு இயக்குனர் PMJF Lon R.மதனகோபால் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். முன்னாள் பன்னாட்டு இயக்குனர்கள் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

நமது 324 A மாவட்டத்தை சார்ந்த பலர் சாதனை புரிந்து விருது பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தார்கள். இந்த விருதுகளைப் பெற நமது சங்கத் தலைவர்களை ஊக்குவித்த முன்னாள் ஆளுநர்கள் PMJF Lion Er.V.ஜெகனாதன் (2021-22), மற்றும் Passion PMJF Lion Dr.N.K.விஸ்வநாதன் (2022-23) அவர்களுக்கும் நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்....

**MJF Lion P.வினோத் கண்ணா** நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் 2021-22ம் ஆண்டின் தலைவராக பொறுப்பை ஏற்று செய்த எனக்கு நமது 324 கூட்டு மாவட்ட அளவில் சிறந்த தலைவர் விருதும், நமது சங்கத்தின் Records and Accounts maintaince-யிற்கும் கூட்டு மாவட்ட அளவில் சிறந்த சங்கம் (Best Club for Record maintained in multiple 324) என இரண்டு விருதுகளையும் பெற்ற மகிழ்ச்சியில் பெருமை கொள்கின்றேன். இதற்காக எனக்கு உதவிய எனது செயலாளர் Lion S.சுதிர்,




பொருளாளர் Lion P.நித்தியபாண்டி, துணை செயலாளர் Lion RCP.Raju, துணை பொருளாளர் Lion P.சுதாகரன் மற்றும் நமது சங்கத்தின் PDG MJF Lion A.வைரப்பிரகாசம், MJF Lion Meera vaivaprakasam, முன்னாள் தலைவர்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த விருதுகளை சமர்ப்பிக்கின்றேன்.

உலகின் மிக மகிழ்ச்சியான விஷயம் சிரிப்பு, அதைவிட சிறந்த விஷயம் அந்த சிரிப்பிற்கு நாம் காரணமாக இருப்பது. ஆம், நமது சங்கத்தின் அளவிட முடியாத சேவைகளில் நமது பர்மா காலனியில் நாம் செய்து கொடுத்த பஸ் வசதி அங்குள்ள மக்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் இது ஆனந்தத்தை தரும்படி உள்ளது. இது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்காக நமக்கு உதவிய நமது ஊக்குநர் PMJF Lion AMSG அசோகன் அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த விருதுக்கு நமது சங்கத்தினை பரிந்துரை செய்த நமது முன்னாள் ஆளுநர் PMJF Lion Er.V.ஜெகன்னாதன் அவர்களுக்கும் Cabinet Team-யில் உள்ள அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.







**Passion PMJF Lion Dr.N.K.விஸ்வநாதன்** (2022-23 **IPDG)**

உண்மை, கருணை தொலைநோக்குப் பார்வையுடன் வீரமுழக்கமிட்டுக் கொண்டு "சீர்திருத்தத்திற்கு எழுவீர்" என்ற தாரக மந்திரத்துடன் நமது 324A மாவட்டத்தை

உலக அளவில் எடுத்துச் சென்ற Passion PMJF Lion Dr.N.K.விஸ்வநாதன் அவர்களுக்கு கூட்டு மாவட்டத்தில் இருந்து சிறந்த ஆளுநருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**PMJF Lion D.பிரபாகரன்** 324 கூட்டு மாவட்ட அளவில் - 2022-23 ஆண்டின் சிறந்த வட்டாரத் தலைவருக்கான விருது (Best Zone Chairperson Award) மற்றும் ISAME GAT Team-யின் சிறந்த வட்டாரத் தலைவருக்கான கௌரவ விருது எனக்கு கிடைக்கப் பெற்றதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.




கடந்த ஆண்டு (2022-23) ஆண்டு முழுவதும் சிறப்பாக செயல்பட்டதற்காக எனக்கு கிடைத்த இந்த விருதினை நான் பெறுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த நமது சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், நமது சங்கத்தின் முன்னாள் ஆளுநர் MJF Lion A.வைரப்பிரகாசம் மற்றும் MJF Lion மீரா வைரப்பிரகாசம் அவர்களுக்கும் மாவட்ட ஆளுநர் Passion Lion Dr.N.K.விஸ்வநாதன் PMJF அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.



# Lion Star

Our Secretary's Family in Feeding our Feathered Friends, Flyed high in all social media. ஆம், சேவையால் இதயம் தொட்ட நமது சங்கத்தின் சிங்கங்கள், செயலாளர் லயன் நித்தியபாண்டி மற்றும் லயன் தேவி நித்திய பாண்டி அவர்களின் வீட்டு மொட்டை மாடியில், சிறகடித்து பறக்கும் பறவைகளை பார்ப்பதற்கு, ஒரு மினி சரணாலயம் போல் இருக்கின்றது.

**"நாம் பிறந்த இந்த பூமிக்கு தினமும் அரை மணி நேரம் சேவை செய்ய வேண்டும்."**



**எங்கள் வீட்டு மினி சரணாலயம் :** யார் சொன்னது சிட்டுக்குருவி இனம் அழிந்து வருகிறது என்று, அது இருக்கும் இடத்தில் எல்லாம் நாம் செல்போன் டவர்களையும் வீடுகளையும் கட்டி விட்டோம். நாம் எல்லாம் சிவகாசியில் பிறந்து வளர்ந்த போது சிவகாசி ஒரு கிலோமீட்டர் சுற்றளவு தான் இருந்தது ஆனால் இப்போது 25 கிலோமீட்டர் சுற்றளவு பறந்து விரிந்து இருக்கின்றது. கிழக்கே சாத்தூரைத் தொட்டுவிட்டோம், மேற்கே ஸ்ரீவில்லிபுத்தூரையும், வடக்கே கழுகுமலையும், தெற்கே விருதுநகரையும் தொட்டுவிட்டோம். முன்பு நிறைய இடங்களில் நாட்டு கருவேல மரங்கள் இருந்தன. அதில் தான் குருவிகள் வாழ்ந்து கொண்டிருந்தன ஆனால் இப்பொழுது அந்த மரத்தை காண்பது அரிதாகி விட்டது.

நாங்கள் சுமார் 13 ஆண்டுகளாக ஓம் சேர்மா நகரில் வசித்து வருகிறோம். என் கணவர் நித்திய பாண்டிக்கு சிறு வயது முதல் லவ் பேர்ட்ஸ் வளர்ப்பது, மரம், செடிகள் வளர்ப்பது,

வண்ண மீன்கள் வளர்ப்பது போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் இருக்கும். நாங்கள் எங்கள் வீட்டில் லவ் பேர்ட்ஸ் வளர்த்து வந்தோம் அப்பறவைகளுக்கு உணவாக தினை வைத்து வந்தோம் அதிலிருந்து சிதறிய தானியங்களை சாப்பிட சில குருவிகள் வந்து போயின. இதை கவனித்து வந்த நாங்கள் குருவிகளுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று எண்ணினோம்.

2015ஆம் ஆண்டு நமது சங்கத்திலிருந்து கொடைக்கானல் டூர் சென்ற இருந்தோம், அங்கு நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் குருவிகளுக்கு உணவு அளிப்பதற்கு என்றே ஒரு birds feeder தொங்கவிடப்பட்டிருந்த அதில் குருவிகள் தினை தானியங்களை கீழே சிந்தாமல் சிதறாமல் சாப்பிடுவதை நாங்கள் பார்த்தோம். உடனே நம் வீட்டிலும் இதே போல் செய்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது அதே போன்று birds feeder நாங்கள் இணையதளத்தில் வாங்கினோம்.

அதை எங்கள் வீட்டு பால்கனியில் தொங்க விட்டோம் முதலில் குருவிகள் அதிகம் வரவில்லை. சில குருவிகள் மட்டும் வந்து சென்றது, பிறகு நாங்கள் குருவிகள் வருவதற்காக பால்கனி சுவரில் தினையை வைத்து அதன் மேல் தண்ணீர் தெளித்து விட்டோம், இது என் கணவரின் ஐடியா, தண்ணீ தெளித்ததால் தினை நனைந்து அதிலிருந்து வாசனை வந்தது, அந்த வாசத்திற்கு மேலும் சில குருவிகள் வந்து தினையை சாப்பிட ஆரம்பித்தது, நாங்கள் மண் பாத்திரங்களில் தண்ணீரும் வைத்து வந்தோம் அதில் குருவிகள் குளித்து, விளையாடி செல்லும் எங்கள் வீட்டின் அருகில் சில நாட்டு கருவேல மரங்கள் இருக்கிறது. அதில் குருவிகள் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறது, அந்த மரத்தை நாங்கள் பாதுகாத்து வளர்த்து வருகின்றோம். பிறகு நாட்கள் செல்ல செல்ல குருவிகள் வருகை அதிகமாகிவிட்டது, இதை பார்க்கும் பொழுது எங்களுக்கு மகிழ்ச்சியாகவும், புத்துணர்ச்சியாகவும், மனநிறைவாகவும் இருந்தது.

சிட்டுக்குருவிகளின் சத்தம் மிகவும் மென்மையாகவும், இனிமையாகவும் இருக்கும். பறவைகள் என்றாலே நம் முன்னோர்களின் மறுபிறவி அதில் சிட்டுக் குருவியும் ஒன்று சிட்டுக்குருவிகளுக்கு உணவு அளிப்பதன் மூலம் நம் முன்னோர்கள் வீட்டிற்கு வந்து உணவு உண்டு செல்கிறார்கள் என்ற மனதிருப்தியை தருகிறது.

எங்கள் வீட்டு குழந்தைகளுக்கும் சிட்டுக்குருவி மற்றும் வேறு பறவைகளுக்கும் உணவு, தண்ணீர் வைத்து பராமரித்து, பாதுகாக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி உள்ளோம். எங்கள் வீட்டு குழந்தைகளிடம் கணவர் கூறும் அறிவுரை தினமும் அரை மணி நேரம் தாய் தந்தைக்கு சிறு உதவியும், நாம் பிறந்த இந்த பூமிக்கு அரை மணி நேரம் ஒதுக்கி, அதாவது மரம், செடி நடுதல், அதற்கு தண்ணீர் ஊற்றுதல், குப்பைகளை சுத்தம் செய்தல் போன்ற கடமைகளை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறார். அடுத்த தலைமுறையினரும் இதை செய்தால் சிட்டுக்குருவி இனம் மேலும் பெருகும்.

ஆரம்ப காலத்தில் நாங்கள் ஒரு கிலோ முதல் இரண்டு கிலோ வரை தினை வைத்தோம், ஆனால் இன்று ஒரு நாளுக்கு 10 கிலோ தினை வைத்து அதில் ஆயிரக்கணக்கான குருவிகள் தானாக வந்து சாப்பிட்டு செல்கிறது, இதற்கு நாங்கள் பாக்கியம் பண்ணி இருக்கின்றோம். நாங்கள் வெளி ஊர்களுக்கு சென்றாலும் குருவிகளுக்கு தினை தண்ணீர் வைக்க எங்கள் உறவினர்களிடம் சொல்லிவிட்டு செல்வோம்.

மேலும் எங்கள் வீட்டு சிட்டுக்குருவிகளுக்கு தினை மூடைகள் வழங்கிய நமது லயன்ஸ் நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள் பல. மேலும் சிட்டுக்குருவிகளை வீடியோ எடுத்து பல சேனல்களுக்கு அனுப்பி எங்கள் வீட்டிற்கு வரும் சிட்டுக்குருவியை உலகம் முழுவதும் அறியச் செய்த லயன் சுதீர் அண்ணனுக்கு நன்றிகள் பல.

சிட்டுக்குருவிகளை பாதுகாப்போம்!

வாழ்க வளமுடன்!

Lion தேவி நித்தியபாண்டி

# Cover Story

## நமது சீனியர் பள்ளியை வளப்படுத்திய துடிப்பான தாளாளர்கள்

**Lion K.Prabakar**, President.



அனைவருக்கும் வணக்கங்கள். நமது அரிமா பள்ளியின் சீனியர் வளாகத்தைப் பற்றி எழுத முன்னாள் பள்ளித் தாளாளராகிய (2015-19) எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு சங்க இதழாசிரியருக்கு நன்றி!

நமது முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் பள்ளித் தாளாளர் **லயன் A.M.S.G.ராமமூர்த்தி MJF** (1991-94) அவர்களால் 1993ம் வருடம் சீனியர் வளாகம் கட்டுவதற்காக விருதுநகர் மெயின் ரோட்டில் 15 ஏக்கர் இடம் வாங்குவதற்கு அதற்கான இடத்தை நிர்ணயிக்கப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டது.

நமது முன்னாள் தலைவர் **Lion A.P.செல்வராஜன் MJF** (1994-97) அவர்கள் தாளாளராக இருந்த பொழுது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இடத்தை 16.09.1994 அன்று நமது சீனியர் வளாகம் கட்டுவதற்காக வாங்கப்பட்டது. சரியான சமயத்தில் வாங்கப்பட்ட இடம், இன்று நாம் உயர்ந்த நிலையில் இருப்பதற்கு வழி வகுத்துள்ளது. இன்றைய தினம் விருதுநகர் மெயின் ரோட்டில் 15 ஏக்கர் இடம் வாங்குவதை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

நமது முன்னாள் ஆளுநர் **Lion L.பழனிச்சாமி MJF (1997-2000)** அவர்கள் தாளாளராக இருந்த போது சீனியர் வளாகத்திற்கு நாம் கட்டிடம் கட்டி செல்ல வேண்டுமானால் ஜூனியர் வளாகத்தில் இடப்பற்றாக்குறை வந்தால் மட்டுமே கட்டிடம் கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிப்போம் என்பதை உணர்ந்து ஜூனியர் வளாகத்தில் ஒரு வகுப்பிற்கு ஒரு பிரிவு என்பதை மாற்றி ஒரு வகுப்பிற்கு இரண்டு பிரிவுகள் என்று ஆரம்பித்தார்கள்.

நமது சங்க உறுப்பினர் **Lion S.ஸ்ரீராம் அசோக்** (2000 - 2003) அவர்கள் தாளாளராக இருந்த போது சீனியர் வளாகத்தில் கட்டிடம் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் முழு வீச்சுடன் ஆரம்பிக்கப்பட்டது.

நமது முன்னாள் தலைவர் மற்றும் இன்றைய பள்ளித் தாளாளர் **Lion J.ரமேஷ் குமார்** அவர்கள் (2003 - 2006) முதல் முறை பள்ளித் தாளாளராக இருந்தபோது மிகப்பெரிய முயற்சி எடுத்து, பல அரிமா நண்பர்களிடமும், நிறுவனத்திடமும் டொனேஷன் மற்றும் பேங்க் லோன் பெறப்பட்டு 2005ல் கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டது. மெயின் ஸ்பான்ஸர் MEPCO நிறுவனம் ஆகும். இருபத்தி ஐந்து லட்சம் டொனேஷன் கொடுத்தார்கள். அந்த டொனேஷன் பெற்றுக் கொடுத்த நமது PDG Lion A.வைரப்பிரகாசம் MJF அண்ணாச்சிக்கும், Lion N.R.K.R.ரவீந்திரன் அவர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

08.06.2006 அன்று சீனியர் பள்ளி வளாகத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தொடங்கப்பட்டது. மெயின் பிளாக்கில் ‘ட’ வடிவத்தில் இரண்டு மாடி கட்டிடம், மாணவ, மாணவியருக்கான ஹாஸ்டல் தரைத்தளம் மற்றும் காம்பவுண்டு சுவர் கட்டி முடிக்கப்பட்டது. பள்ளி நடத்துவதற்கு தேவையான லேப் உபகரணங்கள், கம்ப்யூட்டர்கள், டேபிள், பெஞ்ச், பஸ் என்று அனைத்து வசதிகளும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியர், ஆசிரியைகள் மற்றும் ஆபீஸ் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஒரு நிறுவனத்தை புதியதாக தொடங்க வேண்டுமென்றால் அதில் எவ்வளவு சிரமங்கள் உள்ளது, எவ்வளவு மெனக்கட வேண்டும் என்று அனைவருக்கும் தெரியும். நமது முன்னாள் மற்றும் இந்நாள் பள்ளி தாளாளர் Lion J.ரமேஷ் குமார் அவர்கள் எடுத்த கடுமையான முயற்சி இன்று தென் தமிழ்நாட்டில் நாம் ஒரு மிகச்சிறந்த பள்ளி என்ற நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

அடுத்து பதவியேற்ற முன்னாள் தலைவரும், பள்ளித்

தாளாளருமான **Lion S.ஸ்டாலின்** (2006-09) அவர்கள் அடுத்த கட்ட நிலைக்கு பள்ளியை எடுத்துச்செல்ல 'ட' வடிவத்தில் இருந்த இரண்டு தளத்தை 'ப' வடிவத்தில் வருமாறு மேலும் இரண்டு தளம் கட்டப்பட்டது, மற்றும் ஹாஸ்டலில் தனி டைனிங் ஹால் கட்டப்பட்டது.

மீண்டும் ஒரு முறை பள்ளி தாளாளராக பதவியேற்ற **Lion A.M.S.G.ராமமூர்த்தி** MJF (2009-12) அவர்கள் நமது பள்ளியின் அடுத்த கட்ட தேவையை பூர்த்தி செய்யும்படி சுமார் 1500 பேர் அமரக்கூடிய Multi purpose ஆடிட்டோரியம் கட்டினார்கள். அதில் 3 indoor Shuttle Court, கேரம், செஸ், டேபிள் டென்னிஸ் ஆகிய சகல வசதிகளையும் உள்ளடக்கியது. மேலும் மாணவர் விடுதியில் முதல் தளம் கட்டப்பட்டது. மாணவியர் ஹாஸ்டலில் தேவைக்கேற்ப மாறுதல் செய்யப்பட்டது, மற்றும் I.T.லேப், Library-ல் A/c வசதி செய்யப்பட்டது.

அடுத்து பள்ளி தாளாளராக பதவியேற்ற **Lion.K.அம்புலிராஜன்** (2012-15) அவர்கள் நமது பள்ளியை மேலும் உயர்நிலைக்கு கொண்டு செல்லவும், விடுதியில் படிக்கும் பள்ளி மாணவ, மாணவியர்களின் வளர்ச்சிக்கும், பள்ளியின் வளர்ச்சிக்கும், பள்ளி முதல்வர் பள்ளி வளாகத்திற்குள்ளேயே தங்கினால் நல்லது என்பதை உணர்ந்து பள்ளி முதல்வருக்கு வளாகத்தினுள் வீடு கட்டி பள்ளி முதல்வரை வளாகத்தினுள் கொண்டு வந்தார்கள். மேலும் மாணவியர் விடுதியில் முதல் தளம் கட்டப்பட்டது. பள்ளி வளாகத்தினுள் லயின்ஸ் பார்க் மற்றும் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டது.

2015-2019ம் வருடத்தின் பள்ளித் தாளாளராக நான் பதவியேற்றவுடன் 'ப' வடிவத்தில் இருந்த மெயின் ப்ளாக் □'சதுர வடிவமாக' ஒரு லேப் ப்ளாக் கட்டப்பட்டு அது முற்றிலும் மாடர்ன் லேப் ஆக வடிவமைக்கப்பட்டது. மேலும் பள்ளியின் முன் தோற்றம் மாடர்னாக முற்றிலும் மாற்றப்பட்டது. பள்ளி நுழைவு வாயிலில் பெற்றோர்களின் வசதிக்கேற்ப விசிட்டர்ஸ் ஹால் கட்டப்பட்டது. ஸ்வேஜ் டிரிட்மெண்ட் பிளான்ட் கட்டப்பட்டது.

மாணவ மாணவியரின் படிப்பிற்கு உதவும்படி அனைத்து வகுப்பறையிலும் ஸ்மார்ட் போர்டு நிறுவப்பட்டது. Multi Purpose ஆடிட்டோரியம் புதுப்பிக்கப்பட்டது. பள்ளி வளாகத்தினுள் பின் பகுதியில் தார் ரோடு போடப்பட்டது. மாணவ, மாணவியரின் Wash Room முழுவதுமாக புதுப்பிக்கப்பட்டது.

அடுத்து பதவியேற்ற முன்னாள் தலைவர் **Lion N.கனகசபேசன்** (2019-21) அவர்கள் வளாகத்தினுள் பல புதுப்பிக்கப்பட வேண்டிய வேலைகளை செய்து முடித்தார்கள். COVID வந்து உலகமே ஸ்தம்பித்துப் போன நிலையில் ஆன்லைன் வகுப்பு நடத்த தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்கி அனைத்து வகுப்பறையிலும் நிறுவி தமிழ்நாட்டிலே ஏன் இந்தியாவிலே இது மாதிரி சிறப்பாக எந்தப் பள்ளியிலும் ஆன்லைன் வகுப்பு நடக்கவில்லை என்று சொல்லுமளவிற்கு மிகச் சிறப்பாக நடத்தி மாணவ மாணவியரை மிகச்சிறந்த முறையில் கல்வி கற்க வைத்தார்கள்.

அடுத்து மீண்டும் பள்ளித் தாளாளராக பதவியேற்ற **Lion.J.ரமேஷ் குமார்** (2021ல் இருந்து) அவர்கள் COVID சூழ்நிலையினால் அனைத்தும் ஸ்தம்பித்துப் போயிருந்த நிலையில் இருந்து மீண்டும் புத்துணர்ச்சியோடு பள்ளியை எழ வைத்து முதன்மையான நிலைக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

புதுப்பிக்கப்பட வேண்டிய வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டது. சீனியர் வளாகத்தில் முதலாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை தொடங்கப்பட்டது. பஸ் மற்றும் வேன்கள் வாங்கப்பட்டது. முன்னாள் மாணவர் சங்கத்தின் உதவியுடன் Kids Park தொடங்கப்பட்டது. அடுத்த புது புராஜெக்ட் துவங்குவதற்கு வடமலாபுரத்தில் 6 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. தற்சமயம் அடுத்த முயற்சியாக இன்றைய சமுதாயத்தின் தேவைகளை உணர்ந்து இண்டர்நேஷனல் ஸ்கூல் ஆரம்பிப்பதற்கு சீனியர் வளாகத்தின் பின்புறம் இருக்கும் இடத்தில் கட்டிட வேலைகளை ஆரம்பித்துள்ளார்கள். விரைவில அட்மிஷன் ஆரம்பிக்கப்படும். அவர்கள் பணி தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

இன்று நமது சீனியர் வளாகத்தில் 388 மாணவர்கள் மற்றும் 262 மாணவியர்கள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். 44 ஆசிரியர்கள் மற்றும் 15 அலுவலர்கள் இருக்கிறார்கள். சீனியர் வளாகத்தில் கம்ப்யூட்டர் லேபில் 71 கம்ப்யூட்டர்கள், Maths Lab, Physics Lab, Chemistry Lab, Biology Lab, Montessori Lab, ATAL Lab, Music Room, Scout & Guide Room ஆகிய வசதிகள் உள்ளடங்கியது.

Libraryல் 13,585 புத்தகங்கள் உள்ளன. பல்வேறு Extra Curricular Activities மாணவ, மாணவியருக்கு கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. மாநில அளவில் பல விருதுகள் நமது மாணவ, மாணவியர்கள் பெற்றுள்ளார்கள், பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நமது பள்ளிக்கு ISO மற்றும் 5S தரச்சான்றிதழ்கள் வாங்கப்பட்டுள்ளது. பள்ளி முதல்வராக Mr.M.G.Pandian M.A.,M.Ed., M.Phil., அவர்கள் உள்ளார்கள்.

ஒவ்வொரு தாளாளர்களின் கடும் முயற்சியாலும், நமது அரிமா நண்பர்களின் உதவியாலும் நமது பள்ளி தென் தமிழகத்தில் முதன்மையான பள்ளியாக திகழ்கிறது. ஒவ்வொரு தாளாளரும் அவர்கள் பணியை சிறப்புற செய்ய ஆலோசனைகள் மற்றும் உதவிகள் செய்யும் நமது சிவகாசி லயன்ஸ் கின்டர் கார்டன் ஸ்கூல் கமிட்டி உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். பல பெருமைகளுடனும், வளர்ச்சிகளுடனும் இந்த பயணம் என்றென்றும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

அனைவருக்கும் நன்றிகள்...



# GENERAL BODY MEETING-SEPTEMBER 2023

**Lion. Sharmeli Ravindran**



The General Body Meeting for the month of September was Organized on 27.09.2023 at our Lions Junior campus by 7.25 P.M. It was a wonderful evening with Vegetable Soup as the welcome drink. To kickstart the programme Tail Twister game was conducted by Lion Renuga Devi Muthukumaran. All the Lions participated in the game with great enthusiasm.

Our President Lion K.Prabakar called the meeting to Order. Flag Salutation was done by Lion.Murali Raj. Lions Prayer was read out by Lion.Vivekanathan. One minute Silence for "World Peace" was observed by all the members. Next our president welcomed the gathering. Minutes of the Board meeting held on 13.09.2023 was read by our Secretary. Secretary report was submitted by Lion Nithya Pandi.

Introduction of the chief Lion.M.Stephen MJF Zone Chairperson was done by Lion Sridevi Nithya Pandi. Then our Zone Chairperson Lion Stephen MJF addressed the audience. He appreciated our club for maintaining effective file management in a perfect way and congratulated, not just for doing the right thing, but for doing it in a Smart, Stragic way that changes lives by bringing dignity to others through humanitarian Service. Since it is a Bulletin Month Celebration our Bulletin Editor Lion Deepa Sudhakaran gave a brief introduction about our clubs bulletin and she introduced Lion A.Bagavathy DC for Club Bulletin to the Public. Our Bulletin "The Jewel" was released by our Zone Chairperson & DC for

Bulletin received the first copy. Then he addressed the gathering and Conveyed that club Bulletin acts as a mission of our club activities. He also appreciated how adequate care was taken by the editors to bring each and every issue of the book in an innovative manner. Then all the past bulletin editors were honored with a memento as a token of love and appreciation.

**SERVICE PROJECTS :**

Education aid was given to Muthulakshmi, Sewing machine was donated to Jeyanthi, Artificial limps were given to Ganesan, Sivamurugan, Vijayakumar, Pandeeswari, Maadathi and Wheel Chair was donated to Sivakasi G.H. In any other matter our president invited MJF Lion P.Vinoth Kanna and PMJF Lion D.Prabakaran and handed over the awards that they got from Multiple District - 324. Then International Membership cerficate was issued to Lion Shakila Prabakar and the Sponsorship Certificate was given by Our Zone Chairperson to our president by Lion K.Prabakar.

In Pleasantaries, the Zone Chairperson was honoured by our President. Then our DC Bhaghavathy was given a memento. Members of other club office bearers were also given a momento. Birthday Greetings was bestowed by our Greeter Committee Chairperson Lion Deepa Arunkumar. Cake was cut by the Birthday babies and distributed to everyone. Lion Renuga Devi announced the Tail Twister winner and prizes were given to them.

Early Bird Award was sponsored by Lion S.P.R.Prabhu. Vote of thanks was given by Lion P.Sudhakaran. Then the meeting came to end with National Anthem and the meeting was adjourned by the President.








LIONS CLUB






LIONS CLUB OF SIVAKASI



# பொதுக்குழுக் கூட்டத்தில் பட்டிமன்றம்

Lion புவனேஸ்வரி



அக்டோபர் மாதத்தின் முதல் பொதுக்குழு கூட்டம், நமது சங்க உறுப்பினர்களை ஊக்குவிக்கும் விதமாக உற்சாகமான சிறப்பு பட்டிமன்றத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள் நமது முத்தலைவர்கள்.

**குடும்ப பிரச்சனைகளை சமாளிப்பதில் வல்லவர் கணவரா அல்லது மனைவியா?** என்ற தலைப்பிற்கு Dr.K.Valarmathi, M.A., M.Phil., Ph.D., DGT., DFL., (Assistance Professor, PG & Research Department of Tamil, SFR College, Sivakasi) அவர்கள் நடுவராக வந்து சிறப்பித்தார்கள்.

குடும்ப பிரச்சனைகளை சமாளிப்பதில் வல்லவர் கணவர் என்ற அணியில் Lion S.N.N.சிவபிரான். Lion.S.R.ஸ்ரீதர் மற்றும் MJF Lion N.கனகசபேசன் அவர்களும், மனைவி என்ற அணியில் Lion ராதிகாதேவி முருகையன், Lion பிரேமலதா பாலசுப்பிரமணியன் மற்றும் Lion ஆஷா தேவி ஸ்ரீராம் அசோக் அவர்களும் உற்சாகமாகவும், சுவாரஸ்யமாகவும் தங்களது கருத்துக்களை முன் வைத்தார்கள்.

கணவர் என்ற அணியில் இருந்து **MJF Lion N.கனகசபேசன்** அவர்கள் முதலில் தனது வாதத்தை சிறப்பாகத் துவங்கினார். மனிதன் தோன்றிய ஆதிகாலம், ஆதாம் ஏவாள் காலத்திலும், புராண காலமான ராமாயணம், மகாபாரதக் காலத்திலும், தற்போதைய அம்பானிக் குடும்பக் காலம் வரை குடும்பத்தில் பிரச்சனைகள் உருவாகக் காரணமாக இருப்பது பெண்கள் தான். அதை சரி என்று சொல்லியும் Sorry என்று பணிந்தும், Saree வாங்கிக் கொடுத்தும் திறம்பட சமாளிப்பது ஆண்கள் தான் என்று கூறி ஆண்கள் அணிக்கு வலு சேர்த்தார்.

அடுத்து மனைவி என்ற அணியில் **Lion பிரேமலதா பாலசுப்பிரமணியன்** அவர்கள் வள்ளுவரின் மேற்கோள்

“மனைக்கு விளம்கம் மடவாள்” என்று சுட்டிக்காட்டினார். மாறும் சூழலுக்கு ஏற்ப மாறுபவள் மனைவி, மாறாத ஆணாதிக்கம் கொண்டவர் கணவர். தன்னுடைய ‘மா’ பிள்ளை தான் அவளுக்கு முதல் குழந்தை, மேலும் தன் குழந்தைகள் மற்றும் குடும்பத்தில் உள்ள அனைவரது பிரச்சனைகளையும் அன்பு என்ற தாரக மந்திரம் மூலம் சமாளிப்பது பெண்கள் தான் என்று திருக்குறள் மற்றும் நகைச்சுவை கதைகளுடன் உறுதிபடக் கூறினார்.

கணவர் என்ற அணியில் பேச வந்த **Lion.S.R.ஸ்ரீதர்** அவர்கள், பிறர் சொல் கேட்டு தன் சுய புத்தி இல்லாமல் அவல நிலை அடையும் பல பெண்கள் உண்டு. கணவர்கள் அமைதி காத்து பிரச்சனை பெரியதாகாமல் வெளியில் தலை நிமிர்ந்து நடந்து குடும்பத்தைக் காக்கின்றனர். மனைவியின் சிரிப்பிற்காகவும், குழந்தைகளின் மகிழ்ச்சிக்காகவும், பல அப்பாக்கள் தங்களுடைய ஆசைகளை வெளியில் சொல்லுவதில்லை, அனைத்து பிரச்சனைகளையும் பொறுப்புடன் பலமுறை சிந்தித்து, வாதங்களைத் தவிர்த்து, சரியான முடிவு எடுப்பவர்கள் கணவர் தான் என்று வாதாடினார்.

மனைவி என்ற அணியில் பேச வந்த **Lion ஆஷாதேவி ஸ்ரீராம் அசோக்** பெண்கள் கடலின் ஆழத்தல் உள்ள அமைதி போன்று எந்த பிரச்சனைக்கும் விடை கண்டு பிடித்து அமைதி தருவார்கள். இயற்கையாகவே பெண்கள் Physically, Psychologically, Emotionally, mentally ஆண்களை விட வலிமை படைத்தவர்கள் என்பதை தன்னுடைய வாழ்க்கை பயணத்தில் இருந்து அனுபவங்களை உணர்வுப் பூரணமாகப் பகிர்ந்து கொண்டார். கணவன் தளர்வடையும் போது அவனுக்கு ஊக்கமளிப்பது மனைவி தான் கூறினார்.

இயல்பாகவும், நகைச்சுவையாகவும் பேசிய **Lion S.N.N.சிவபிரான்** அவர்கள் பிரச்சனைகளை ஆரம்பிப்பதே பெண்கள்தான் பிறகு எவ்வாறு அவர்கள் அதை சமாளிக்க முடியும்... ஆதிக்கம் கொண்ட கணவனை அடக்கி வைப்பதே மனைவிதான். கணவன் எந்த பிரச்சனையையும்

மேலோட்டமாகப் பார்த்து சரியான முடிவு எடுப்பான். ஆனால் மனைவி தேவையில்லாமல் பிரச்சனைகளைப் பெரியதாக்குவாள். கணவனுக்கு தான் தெரியும் எந்த பிரச்சனையை எங்கு, எப்படி சரியாக சமாளிப்பது என்ற கருத்தை இயல்பான எடுத்துக்காட்டுடன் விளக்கினார்.

பின்பு பெண்கள் அணிக்கு வலுசேர்க்க வந்த **Lion ராதிகாதேவி முருகையன்,** ஆண்கள் பிரச்சனைகளை சமாளிக்கத் தெரியாமல் தான் அமைதி காக்கின்றனர். பெண்களிடம் சரணடைகின்றனர். அறிவியல் ரீதியாக பெண்கள் தான் ஒரே நேரத்தில் பல வேலைகள் செய்யும் திறன் கொண்டவர்கள். ஆண்கள் ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டுமே செய்ய முடியும். இயற்கையாகவே அவர்கள் மூளையில் செல்களும் அவ்வாறே அமைந்திருக்கின்றது. ஒரு ஒரு பெண் பிரச்சனை வந்தால் 3“A”வை பின்பற்றுவாள். Acceptance, Analysis, Assessment இதை கையாண்டு பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு எடுப்பாள் என்று கூறினார்.

இறுதியாக பேசிய நடுவர் அவர்கள் பெண்கள் எவ்வளவு தான் Multi-tasking-யில் சிறந்தவர்களாக இருந்தாலும் தன்னுடைய உணர்வுகளை எளிதில் முகத்தில் வெளிக்காட்டுவார்கள். குடும்பப் பிரச்சனைகளை சாமாளிப்பது என்பது கணவன், மனைவி இருவருக்கும் சரிநிகர் பங்கு உண்டு. ஆனால் குடும்பப் பிரச்சனைகளை வெளியில் சொல்லாமல் தங்களுக்குள் வைத்துக் கொண்டு குடும்பத்தைக் கட்டிக் காப்பதில் உறுதியாக, அக்கறையுடன் அகிம்சையின் வடிவமாக, அமைதியின் சிகரங்களாக இருந்து பிரச்சனைகளை சமாளிப்பதில் வல்லவர்கள் “**கணவரே!**” என்று தீர்ப்பளித்தார்.

உற்சாகமான பட்டி மன்றம் நிறைவு பெற்றவுடன் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் ஆரம்பமானது. கொடி வணக்கத்தை லயன் ஷர்மிளி ரவீந்திரனும், லயன்ஸ் பிராத்தனையை லயன் அமுதா சிவபிரானும் வாசித்தார்கள், உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் அனுசரிக்கப்பட்டது. சங்கத் தலைவர் வரவேற்புரை வழங்கினார், செயலாளர்

தன்னுடைய அறிக்கையை வாசித்தார். பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடுபவர்கள் கேக் வெட்டி மகிழ்ந்தார்கள் Tail Twister விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. Early Bird award லயன் J.விக்னேஷ் மற்றும் லயன் சிந்து ஜா விக்னேஷ் அவர்கள் வழங்கினார்கள். அத்துடன் அன்றைய கூட்டம் இனிய விருந்தோம்பலுடன் நிறைவு பெற்றது.









# உலக லயன்ஸ் சேவை தினம்

*Lion P.Nithyapandi*



Lions Club International உலகின் மிகப்பெரிய சேவை நிறுவனங்களில் ஒன்றாகும். ஜூலை 31, 2023 நிலவரப்படி லயன்ஸ் இன்டர்நேஷனல் 200+ நாடுகளில் 48,906 கிளப்புகளில் 1,352,037 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

ஆண்டுதோறும், அக்டோபர் 8ஆம் தேதியை உலக சேவை தினமாக லயன்ஸ் கிளப் இன்டர்நேஷனல் கொண்டாடுகின்றது. இது லயன்ஸ் சங்கத்தின் பொன்மொழியான "We Serve" என்பதை வலுப்படுத்த ஒரு அர்த்தமுள்ள சந்தர்ப்பமாகும்.

உறுப்பினர்கள் சேவையில் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவும் தங்கள் பணியில் சேர மற்றவர்களை ஊக்குவிக்கவும் இது ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இது உலகளாவிய சங்கத்தில் உள்ள ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு முக்கியமான நாளாகும்.

இந்த நாளில் நமது சங்கம் பல சேவைகள் புரிந்தது, அமிர்தா அன்பு இல்லத்திற்கும், வள்ளலார் இல்லத்திற்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

ஜூவக்கல் முதியோர் மற்றும் ஆதரவற்ற காப்பகத்திற்கும் மதிய உணவு வழங்கி, ஒரு மாதத்திற்குத் தேவையான பலசரக்கு மற்றும் அரிசி வழங்கினோம். இது அங்குள்ளவர்களின் முகத்தில் புன்னகையை வரவழைத்த கருணைச் செயலாகும்.

அமிர்தா அன்பு இல்லத்திற்கு மரம் மற்றும் பூச்செடிகள் வழங்கினோம். Lion R.C.P.ராஜு அவர்கள் அமிர்தா முதியோர் இல்லத்திற்கு இன்வெர்ட்டர் பேட்டரிகளை வழங்கினார். இதனால் அங்குள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகின்றது.

# லயன்ஸ் சேவை தினத்தில் செய்த சேவைகள்






















# இந்த மாதத்தின் சேவைகள்























# சிறப்பு மருத்துவ முகாம்

19.09-23 அன்று நமது சங்கம் சிவகாசி சுகாதாரத் துறையுடன் இணைந்து எரிச்சநத்தத்தில் அமைந்துள்ள, நயினார் கோயில் திருமண மண்டபத்தில் வைத்து காலை 9.00 முதல் மாலை 4.00 மணி வரை சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த மருத்துவ முகாமில் பொது சிறப்பு மருத்துவம், சித்த மருத்துவம், பல், கண், இதய நோய் பரிசோதனைகள் செய்யப்பட்டது. மேலும் ஆய்வகப் பரிசோதனைகளாக இசிஜி, கர்ப்பவாய் புற்றுநோய், கர்ப்பிணிகளுக்கு ஸ்கேன், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் பரிசோதனைகள் என அனைத்தும் இலவசமாகப் பார்க்கப்பட்டது. T8, x-ray இவை 40 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பார்க்கப்பட்டது.

இதில் பொதுமக்கள், கர்பிணிகள் திரளாகக் கலந்துக் கொண்டனர். மேல்சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிவகாசி மற்றும் விருதுநகர் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த மருத்து முகாமில் மருத்துவர்கள், சமுதாய நல செவிலியர்கள், Mlhp staffs, லேப் டெக்னீசியன்கள், மருந்தாளுனர்கள், சுகாதார ஆய்வாளர்கள், TB, Wing, சித்தா, ஆயுர்வேதா, பல் மருத்துவர்கள் கலந்து கொண்டார்கள்.










# Eye Health and Safety tips from your Ophthalmologist

Dr.M.Naveen MBBS.,DO.
Naveen Eye Hospital



**TIPS FOR HEALTHY EYES**

Protect it, before it gets too late

**1.Exercise regularly -** Regular exercises can help delay age related diseases in eyes

**2. Eat balanced diet -** Diet rich in fruits, green leafy vegetable, omega-3 fatty acids can reduce risk of eye diseases

**3. Wear sunglasses -** Sunglasses protect eyes from harmful UV radiations of sun

**4. Rest your eyes -** 20-20-20 rule  Once in every 20 minutes rest your eye for 20 seconds by seeing an object that is 20 feet away. This reduces eye strain

**5.If you smoke, quit -** Smoking increases risk of sight-threatening eye diseases. So stop smoking

**6. Stay hydrated -** Drink a lot of water or fruit juices to keep your eyes cool.

Visit your Ophthalmologist once in a year

**OCULAR SAFETY AT WORKPLACE**

**1.Wear goggles** with complete eye cover for appropriate outdoor works/ sports

**2.Maintain correct posture** to view monitors slightly below eye level

**3. Ensure proper lighting;** Both too dim and too bright light are not good for eyes

**4. Blink frequently** to protect your eyes from dryness

**5.Take regular breaks** to avoid eye strain

**SAFETY TIPS TO FOLLOW DURING DIWALI**

1. Wear protective goggles.

2. Keep a bucket of water ready.

3. Don't try to light crackers on your hand.

4. Don't try to light multiple crackers at a time.

5. Don't get too close while lighting crackers and move away to a safe distance after lighting.

6. Wash your hands before touching your eyes.

7. Children should never be left unsupervised while lighting the crackers.

In the case of any eye injury do not apply any local ointment, do not rub the eyes, it may worsen the injury. Immediately consult an eye specialist.

**FIRST AID FOR OCULAR INJURIES**

**1.Cuts and Punctures**

a. Don't wash eye with water

b. Don't try to remove embedded object

c. Gently cover the injured eye with an eye pad/shield secured with tape.

**2. Dust Exposure**

a. Don't rub the eye

b. Flush the eye with clean water


**3. Crackers burns / Chemical splash**

a. Don't rub the eye

b. Flush the eye with clean running water for at least 15 minutes

**4. Blunt Trauma**

a. Cold compression



# Unveiling Lions School Activities

**Sports Achievements**



- In the Revenue District Level High Jump tournament conducted by School Education Department on 05.10.2023 at VHNSN College, Virudhunagar, V Rahul of Std XII got II place.
- In the Revenue District Level Athletics tournament conducted by School Education Department on 06.10.2023 at VHNSN College, Virudhunagar, R Amirtha Bhuvana of Std XII got III place in Discus Throw.
- Vaishnavie P of Std Vwon the II place in U - 10 (G) category in the Virudhunagar District Children's Chess Tournament held at KCAD Chidambaram Gnanagiri Matriculation Hr.Sec. School, Sattur organized by Amazing Knights Chess Academy on Sunday,8th October 2023.
- In the Revenue District Level Lawn Tennis tournament conducted by School Education Department on 11.10.2023 at Ramana Vidhyalaya, Rajapalayam, G M Kairav of std XI got I place in U-19 Boys (S) category and G M Kairav & M Lisantha Rooban of std XI got I place in U-19 Boys (D) category. M Shridev Rooban of Std VII got II place in U-19 Boys (S) category, M Shridev Rooban & S Nithis Ananjan of Std VII got II place in U-19 Boys (D) category.
- In the Revenue District Level Lawn Tennis tournament conducted by School Education Department on 11.10.2023 at Ramana Vidhyalaya, Rajapalayam, P Haripriya of std VIII got III place in U-14 Girls (S) category and P Haripriya & K Dhuvaraha of std VIII got I place in U-14 Girls (D) category. J M Anumithra of Std IX got II place in U-17 Girls (S) category RA Abaarajitha & S Jeevashree of Std IX got II place in U-17 Girls (D) category. P Aashika of std XII got II place in U-19 (S) category P Aashika & M Rajeswari of Std XII got II place in U-19 (D) category.
- Swathika P of Std IV and Dev Kiruthika K of Std III won the I place in U - 10 (G) category and III place in U - 8 (G) category

respectively in the District Level Carrom Tournament, held at Sivakasi, organized by VSK Duraiswamy Nadar Girls Matriculation Higher Secondary School on Friday , 13th October 2023.

- In the Virudhunagar District Roller Skating championship 2023, competition conducted at Virudhunagar, A Pranav Aakash of Std VI got District level I category. M Harihara Velan of Std VII got I place in Roller Skating category, III place in Skating Ring one and two category. M Abishek, N Sivaguru Nellaiappan, D Sri Sanjay, R Harivaishnavan, B Harirish Rajan of std IX got I place in Roller Skating category. S K Iniya of Std IX got I place in Roller Skating category, III place in Skating Ring one and two category.

**Achievements in Extra curricular Activities**

- P R Rithika of std X participated as a resource person by giving a demo to make cake & bakery items which was conducted by Department of Economics VHSN College, Virudhunagar on 12.10.2023. She was given a certificate and Memento for her contribution

**Functions**


- Gandhi Jeyanthi celebration was conducted in a grand manner at Junior and Senior Campus on 06.10.2023.

**Others**

- 152 students from classes X to XII and 15 staff went on an Educational Trip to Delhi, Agra, Amritsar & Chandigarh from 24.09.2023 to 04.10.2023 along with Principal.
- State Level Courses (Mid-summer) for Scout Wing training was conducted at Stanley Park, State Training Centre, Coonoor, Nirgiris Dist, our Senior campus Computer Teacher Mr S Marimuthu attended the meeting.
- PETs Mrs M Pathirakali and Mrs V Sangeetha and KG Teacher Mrs K Nagasundari underwent the Cub Master Basic Course in Coonoor, organised by The Bharat Scouts and Guides , TamilNadu State Head quarters.

- Mr M Vadivel, Tahsildar, Sivakasi and Mr John Prabhakaran Selvin, District Education Officer, Virudhunagar inspected the junior school for the recognition.
- 40 Students of Class XII (CS & CA Students) visited the Kamaraj Engineering College, Virudhunagar on Tuesday, 10th October along with their teachers 3 Teachers.
- TamilNadu Fire and Rescue Services , Sivakasi headed by the Mr Venkatesan, Fire Station officer and his crew men gave an awareness program about fire safety and rescue services in the junior school.
- Kabasura Kudineer decoction was distributed to the students of JKG to Std V , teaching and non - teaching staff.
- Science Association meeting was conducted on Friday, 13th October 2023. Mrs S Manicka Roobi MA BEd., PGT of Tamil was the chairperson for the meeting.
- All matriculation Schools Science teachers one day Stem Education Awareness Training Workshop was organised by DEO Pvt Schools, Virudhunagar at Noble Arts & Science College, Palavanatham on 13.10.2023, our senior campus teacher Mr C Jegatheesan, M.Sc., B.Ed., Mr.T.Jeyaprakash attended the programme.

*Mr.M.G.PANDIAN M.A., M.Ed., M.Phil.,*
*Principal,*
*The Sivakasi Lions Mat.Hr.Sec.School.*



# LIONS CUBS ACHIEVEMENTS CORNER

**Lion** ராதிகாதேவி முருகையன்



Lions Cub Rithika - A child Prodigy

Rithika is the daughter of Lion R.C.P.Raju and Lion.Thilageswari. She is doing her tenth standard in our Lions School.

சாதாரணமாக, பத்தாவது படிக்கும் ஒரு குழந்தைக்கு அறிமுகம் என்றால் இவ்வளவு தான் இருக்கும். படிக்கும் பள்ளி, பெற்றோர் பெயர் அவ்வளவுதான் ஆனால், Rithika is different. She has a lot to add to her name as credentials.



**"She is a home baker**
**She is a young entrepreneur**
**She is the founder of Blue Butter Baker"**

Blue Butter Baker என்ற பெயரில் ஒரு பேக்கரியைத் துவங்கி ஆர்டர்கள் வாங்கி விதம் விதமான cakes, cookies, pastries, buns என்று செய்து சொண்டு இருக்கிறான். blue-butter-bakers-offical என்ற அவளுடைய பக்கத்துக்கு சென்று பார்த்தால் ஒரு 15 வயது சிறுமி இவ்வளவு செய்கிறாளா என்று மலைத்துத் தான் போவீர்கள்.

Now a new feather has been added to her. She was invited to conduct a seminar by the Economics department of VHNSN College, Virudhunagar for their Entrepreneurial development Program.

நினைத்துப் பாருங்கள் ஒரு பள்ளிச்சிறுமி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு “Live your Passion and the future is Yours” என்ற தலைப்பில் அவரவருக்கு எதைச் செய்யப் பிடிக்குமோ அவர்கள் ஒரு லாப மிக்க தொழிலாக எப்படி மாற்றுவது என்று பேசி Live cake baking demo செய்து எல்லோருடைய கைதட்டல்களையும் வாங்கியிருக்கிறாள் என்றால் அவளுக்கும் அவள் குடும்பத்துக்கும் மட்டும் அல்ல. நமது சங்கத்துக்கே பெருமை தானே!

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஒரு professional motivational speaker போலவே பேசி மாணவர்களை அமைதியாக அவளுடைய பேச்சால் கட்டிப்போட்டு வைத்திருக்கிறாள். இவ்வளவு சின்னப் பெண் என்ன பேசுவாள், சொதப்பிவிடுவாளோ என்று நினைத்த Economics department ஆசிரியர்கள் கடைசியில் அமர்ந்து போய், மெய் மறந்து, எங்கள் Students இவ்வளவு நேரம் அமைதியாக involvement உடன் கேட்டதை இன்று தான் முதன் முறையாக பார்க்கிறோம் என்று சொன்னார்கள்.

You are never too young to aim high and achieve என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் நமது Lion cub Rithikaவிற்கு நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்கள்.

We are proud of you Rithika.



# காந்தி ஜெயந்தி - சத்தியம் மற்றும் அகிம்சையின் சக்தியை நினைவு கூறும் நாள்

**Lion** முரளிராஜ்



அமைதியின் மூலம் நமது உரிமைகளுக்காகப் போராடக் கற்றுக் கொடுத்த மாமனிதர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் 154-வது பிறந்த நாள் நமது லயன்ஸ் பள்ளியில் கொண்டாடப்பட்டது. இப்போதைய தலைமுறையினருக்கு பள்ளி பாட புத்தகங்களிலும், ரூபாய் நோட்டில் சிரித்தவாறு இருக்கும் காந்தியைத் தான் தெரியும், மேலாடையின்றி வேட்டியுடன் மூக்கு கண்ணாடி அணிந்தவாறு இருக்கும் காந்தி வேடம் தான் பலருக்கும் நினைவில் இருக்கும்.

பள்ளியில் காந்தி ஜெயந்தி கொண்டாட்டம், மகாத்மா காந்தியின் நீடித்த மரபு, அமைதி, அகிம்சை மற்றும் சமூக நீதி பற்றிய அவரது போதனைகளை நினைவூட்டுகின்றன. இந்த மதிப்புகளை மாணவர்களிடம் விதைக்கும் போது மோதல்களை அமைதியான முறையில் தீர்க்க அவர்களை ஊக்குவிக்கும்.

மாணவர்கள் ஆர்வத்துடன் பாடிய பாடல்கள் காந்தி வலியுறுத்திய அகிம்சையின் உணர்வை எதிரொலித்தது. அவர்களின் மேடை நாடகம் காந்தியின் போதனைகளின் சாரத்தை உயிர்ப்பித்தது. இளம் பேச்சாளர்களின் பேச்சுக்கள் அறிவூட்டுவதாதவும், சிந்திக்கத் தூண்டுவதாகவும் இருந்தது. மாணவர்களின் படைப்பாற்றலும் பங்களிப்பும் மிகவும் பாராட்டுக்குரியது.

1969 ஆம் ஆண்டில், மகாத்மாவின் நூறாவது பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் அவரது புகைப்படத்துடன் கூடிய 1 ரூபாய் நோட்டுக்களை ரிசர்வ் வங்கி வெளியிட்டது. இந்த புகைப்படம் 1946-இல் ராஷ்டிரபதி பவனுக்கு வெளியே வைசிராய் இல்லத்தில் எடுக்கப்பட்டது.

2007-யில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அக்டோபர் 2ஆம் நாளை “International day of Non Violence” தினமாக அறிவித்தது. அகிம்சையின் மகத்துவத்தை உலக நாடுகள் அறிய வேண்டும் என்ற நோக்கில் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

காந்தியின் கொள்கைக் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் இடையே ஏற்படுத்தக்கூடிய வகையில் புத்த மத அமைப்பினர் மதுரை காந்தி அருங்காட்சியத்துடன் இணைந்து காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரியிலிருந்து மதுரை வரை அமைதி நடைப்பயணம் மேற்கொண்டனர்.

"உங்களைக் கண்டுபிடிப்பதற்கான சிறந்த வழி மற்றவர்களின் சேவையில் உங்களை இழப்பதே"

– மகாத்மா காந்தி







# சில வரிக் கதைகள்

**அழகு தான் :**

ஒரு நாள் ஒருத்தன் குயிலிடம் சொன்னான், "நீ மட்டும் கருப்பாக இல்லையென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்", கடலிடம் சொன்னான். "நீ மட்டும் உப்பாக இல்லையென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்", "ரோஜாவிடம் சொன்னான். "உன்னிடம் முட்கள் இல்லையென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்" அப்போது அந்த மூன்றும் என்று சேர்ந்து சொன்னது "ஏ மானிடா உன்னிடம் மட்டும் பிறரின் குறை கண்டுபிடிக்கும் பழக்கம் மட்டும் இல்லையென்றால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்" என்று. எனவே பிறரிடம் குறை காணா மனிதன் என்றும் அழகு தான்'

**குளிர்ந்தே இருப்பான் :**

மண் பானையிடம் ஒருவன் கேட்டான், கொட்டும் மழையில் மட்டும் அல்லாமல் கொளுத்தும் வெயிலிலும் கூட உன்னால் மட்டும் எப்படி ஜில்லென்று இருக்க முடிகிறது என்று...? அதற்கு மண் பானை சொன்னது. எனது ஆரம்பமும் முடிவும் மண் தான் என்பது எனக்கு தெரியும். எவன் தன் தொடக்கத்தையும், முடிவையும் உணர்ந்திருக்கின்றானோ அவன் எதற்கு சூடாக இருக்க போகின்றான்.

**கேலி செய்தவர் சிதறிவிடுவர் :**

கழுகுகளை வம்புக்கு இழுக்கும் ஒரே பறவை காகம் தான். ஆனால், கழுகு காகங்களை எதிர்த்து ஒரு போதும் சண்டை போடுவதில்லை... மாறாக கழுகு உயர உயர மேலே பறந்து செல்லும், அப்போது காகம் மூச்சுவிட சிரமம் ஏற்பட்டு தானாக கீழே வந்துவிடும். அதுபோல நம் நிலை கண்டு கேலி, கிண்டல் செய்யும் யாரையும் நாம் கண்டுகொள்ளாமல் நம் இலக்கில் குறிக்கோளாக இருந்து வாழ்வில் உயரச் சென்றால் நம்மை கேலி செய்த சில்லறைகள் எல்லாம் தானாகச் சிதறிவிடும்.

# ஒரு சங்கம் சிறப்பாக செயல்பட

அ – அதனுடைய விதிகளை அறிந்து கொள்ளுங்கள்.

ஆ – ஆக்கம் தரும் ஆலோசனை கூறுங்கள்.

இ – இழிவாக பிறரிடம் பேசாதீர்கள்.

ஈ – ஈதல் சிறப்பென்று அளியுங்கள்.

உ – உரிமை கோருமுன் கடமை செய்யுங்கள்.

ஊ – ஊக்கமில்லையேல் ஒதுங்கி விடுங்கள.

எ – எடுத்து செய்வோரை இகழாதீர்கள்.

ஏ – ஏற்கும் பதவியை பொறுப்புடன் வகியுங்கள்.

ஐ – ஐயமிருந்தால் நேரில் தெளிவு பெறுங்கள்.

ஒ – ஒரு கூட்டமும் தவறாதீர்கள்.

ஓ – ஓய்வு கிடைக்கும் பொழுது சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடுங்கள்.

ஃ – அஃது சங்கம் வளர ஏதுவாக இருக்கும்.

*4X4 4 magic square with date of birth*

*Let 'd' is the date, 'm' is month, Y is first two digits & y is last two digits of the year of the format YYYY .*

| | | | |
|---|---|---|---|
| d | m | Y | y |
| y+1 | Y-1 | m-3 | d+3 |
| m-2 | d+2 | y+2 | Y-2 |
| Y+1 | y-1 | d+1 | m-1 |

*and the Magic sum = d+m+Y+y in all directions (horizontally, vertically & diagonally).*

# Birthday Wishes

*A Birthday Prayer for you...*

*If there's any joy you wish for,*
*God grant it may gladden your way,*
*If there's any blessing you long for,*
*May that be your Gift for Today;*
*If there's any Help you are needing*
*For betterment, comfort or cheer,*
*God grant it be sent on your Birthday,*
*To stay with you year after year.*

*The members of our club who are celebrating their birthdays during the month of October are*



Lion Shenbagamoorthy
03.10.1955



Lion Mala Stalin
05.10.1961



Lion Radhika Devi Murugaian
05.10.1966



Lion P.Sudhakaran
05.10.1975



Lion Saranya Devi
09.10.1980



Lion S.Balasubramanian
09.10.1949



Lion Savithri Devi Gurusamy
12.10.1942



Ln Rathina Saraswathi Impaala
13.10.1976



Lion G.Subburaj
16.10.1959



Lion S.Kumaravel Kani
16.10.1955



Lion Thiruselvi Tenzing
16.10.1959



Lion V.Chella Nivyaa
18.10.1986



Lion A.Ravi
19.10.1960



Ln Bhuvaneswari Sivasakthibalan
19.10.1982



Lion Deepa Rajagobinath
20.10.1981



Ln Kohila Vijayakumar
22.10.1956



Lion C.Rajasekaran
25.10.1972



Lion Rajagopal
26.10.1951



Ln C.Kanagasabai MJF
26.10.1941



Ln Premlatha Ramamoorthy
26.10.1959



Lion K.Sasibalan
31.10.1973

## Wedding Anniversary Wishes

*Time passes, Love remains!*
*Moments pass, Memories stay!*
*May the Wonderful memory of*
*the day when you started your*
*Journey to new Life, keep your*
*relationship strong and*
*Everlasting Forever!*
*Loads of blessings on your*
*Wedding Anniversary day!*

*The members of our club who are celebrating their wedding anniversary during the month of October are*

| | |
|---|---|
| Lion T.Impala - Rathina Saraswathi | 18.10.1996 |
| Lion P.Arunprasanna - Preetha | 29.10.2007 |
| Lion E.A.E.T.S.Janagaraj - Santhi | 30.10.1979 |
| Lion Dr.J.Shanmugarajan - Jeya Sudha | 30.10.1998 |



**Lion Deepa Arunkumar**
Greeter Committee Chairperson 2023-24

# வாழ்த்துரை



இதயம் நிறை அன்பு கொண்ட இதழாசிரியர் லயன். தீபலட்சுமி சுதாகரன் அவர்களுக்கு நாகர்கோவில் – பிடிஜி, லயன் டாக்டர் எஸ்.ஆர்–ன் வணக்கம்.

தங்கள் கை வண்ண Vol.3 கிடைக்கப்பெற்று படித்து மகிழ்ந்தேன், இவ்வளவு விளம்பரதாரர்களைக் கொண்ட ஒரே சங்க இதழ் தங்களதே, அவர்களும் பயன்பெறும் வகையில் நேர்த்தியாக அதனையும் படைத்துள்ளீர்கள்.

தலைவர் K.பிரபாகர் Erode supreme சங்க பெருமையையும் தன் எதிர் பார்ப்பிற்கு தக்க லயன்ஸ் உறுப்பினர்கள் வருகையில்லை எனும் நிலைபாட்டையும் தலைவருக்கே உரிய பாணியில் சொல்லியுள்ளார், இவ்வளவு நேர்த்தியாக சங்க செயல்பாடுகளை வேறு யாராலும் பட்டியலிட இயலாது எனும்படி செயலாளர் நித்தியபாண்டி விளக்கியுள்ளார். பொருளாளர், சுதர்கரன் கடுகு சிறுத்தாலும், காரம் குறையாது என்பதுபோல நச் சென தன் பக்கத்தில் சொல்லியுள்ளார்.

Editor report "If you love what You are doing you will be successful" அருமை, அருமை. International presidents message, sight for Kids, A Ball for all maharastra medical Centre என நல்ல தகவல்கள்... Lion G.Ramamoorthy - cover & story அற்புதம். புகைப்படங்கள் செயல்பாடுகளை பளிச்சென புரிய வைக்கின்றது. இதழாசிரியர்கள் பணியினை இவ்வளவு சிறப்பாக யாராலும் பாராட்ட முடியாது. இழாசிரியர்கள் கிருஷ்ணமூர்த்தி, Stalin, Sankari bala தங்கள் இதழ் பணியின் சிறப்புடன் நினைவு கூர்ந்துள்ளனர். லயன் மகேசன் படைப்பும் பயனுள்ள படைப்பு, லயன் டாக்டர். ஆதிலட்சுமி. சொல்ல வேண்டுமா! உணர்வு பூர்வ எழுத்துக்கள் "Your identity" by Lion Er.Sivapiran, Super.

மூத்த குடிமக்களும் லயன்ஸ் சங்கமும் சிவசங்கரி கதிரவன் கருத்துக்கள் – ஒரு மாறுபட்ட கோணம் தொடர்ந்து உங்கள் கைவண்ண இதழ் ஆபரணமாய் அமர்க்களப்படுத்துகிறது.

வாழ்த்துவது, வாயல்ல இதயம்.

இப்படிக்கு,

நாகர்கோவில் டாக்டர். எஸ்.ஆர்.எம்பிபிஎஸ்., டி.லிட்.,

(சமூக சேவைக்காக)